**கவனிக்க.**- *2009.12.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1632 - 2009 දෙසැම්බර් 11 වැනි සිකුරාදා - 2009.12.11

*1632 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1300 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2009, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009

1. மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், அரச நிருவாக சுற்றறிக்கை 15/90 அடிப்படையில் மத்திய மாகாணத்திற்குரிய மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் இப்பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர்.

3. நியமன எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி என்பன மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அது சம்பந்தமான இறுதித் தீர்வு எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

4. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்புகள் III, II மற்றும் I ஆகியவற்றுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 × 145- 11 × 760 - 6 × 240 - 4 × 320 - ரூபா 23,230 ஆகும். ரூபா 15,440 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு II இற்கான தரம் உயர்வும் ரூபா 17,310 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரம் உயர்வும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

5.2 2007.05.28 ஆந் திகதி அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இற்கமைய சேவையில் அமர்த்தப்பட்டு 05 வருடங்களுக்குள் தாம் சேவையில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கருமமொழி/ மொழிகளுக்கான நிபுணத்துவத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **தகைமைகள்**.- (அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) கீழ் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(1) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி அத்துடன் கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரு அமர்வில் கல்வி பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(2) கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) எல்லாப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாட விதானத்தில் கீழ் ஒரு அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)

7. **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்** :

(i) மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை, அம்மாவட்டத்திற்குள் உள்வாங்கப்படாவிட்டால் குறித்த வெற்றிட எண்ணிக்கை மாகாணத்தினுள் அண்மித்திருக்கும் மாவட்டங்களுக்கு மீள் பகிரப்படும்.

(ii) பரீட்சையில் அவசியப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைவிட குறையுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையின் பேரில் தெரிவுகள் செய்யப்படமாட்டாது.

(அ) **நிரந்தர வதிவுடைமைக்காக இருக்க வேண்டிய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் மத்திய மாகாணத்தில் முந்திய 05 வருட காலங்களில் அண்ணளவாக 03 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும். வதிவுடைமையை நிரூபிப்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ்.- (அச்சான்றிதழின் 2 (அ) மற்றும் 2 (ii) பகுதியில் வாக்காளர் இடாப்பு பட்டியலின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவைப்படும் தகவல்களான முழுப்பெயர், வாக்காளர் இடாப்பு பட்டியல் இலக்கம் மற்றும் பதிவு பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

8. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில், கூடிய புள்ளி மட்டத்தை அடைகின்ற 3% வீதமானவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50% வீதமாவது இருத்தல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனை குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், விசேட மருத்துவ அறிக்கை மூலம் தனது வலது குறைந்த தன்மை குறிப்பிட்ட பதவியில் கடமையாற்றுவதற்கு தடையாக இராது என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

9. **பரீட்சை செயற்றிட்டம்**.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.-

| | வினாத்தாள் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| I. | மொழித்திறன் | 100 புள்ளிகள் | 1 1/2 மணித்தியாலம் |
| II. | உளச்சார்பு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் |

***மொழித்திறன்.-*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் கருத்துரைகள், புரிந்துணர்வு, எழுத்தமைவுகள் மற்றும் இலக்கணத்தை எளிய முறையில் உபயோகிப்பதில் உள்ள அறிவை சோதனையிடும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

***உளச்சார்பு.-*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்களில் உள்ள ஆற்றல், தர்க்கரீதியான சக்தி, பொது விவேகம் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

(கடமைகளை நிறைவேற்றுவதற்காக பரீட்சார்த்திக்குள்ள தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.)

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பினும் நியமனத்திற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50% ஆவது பெற்றுக்கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பெறப்பட்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையைக் கண்டிப்பாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பப் பத்திரங்களை பூர்த்தி செய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. ***பரீட்சைக்கட்டணம்.-*** அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணத்தை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். பரீட்சைக்கட்டணம் ரூபா 600 ஆகும். இக்கட்டணத்தை மத்திய மாகாண சபையின் யாதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். அப்பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டியது மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-20-39 இற்கு ஆகும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது. (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.)

12. **விண்ணப்பங்கள்.-** இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ-4 (21 × 29 cm) (சாதாரண ஹாப்ஷீட்) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து-

(அ) 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்.

(ஆ) 04 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) வலது குறைந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப் படிவத்தின் மேல் "வலது குறைந்த விண்ணப்பத்தாரர்" எனவும் தனது வலது குறைந்த நிலைமையையும் சிவப்பு நிறத்தினால் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப் படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவார். விண்ணப்ப படிவத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

12.1 பரீட்சை நடாத்த திட்டமிட்டுள்ள நகரமும், நகர இலக்கமும் :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |

**குறிப்பு.-** பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்படும் நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின் இரண்டாவது விருப்பமாக குறிப்பிட்டுள்ள நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும். அந்த இரண்டாவது நகரத்தில் போதுமான பரீட்சார்த்தியின் எண்ணிக்கை இல்லாவிடின் அண்மித்திருக்கும் நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும்.

12.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டிருக்க வில்லையெனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

12.3 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு, த. பெ. 114, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2010.01.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தாபலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2009" எனவும் நீங்கள் போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.

12.4 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 2,40,360 ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக் கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

13. **பரீட்சைக்கு தோற்றுதல்.**- பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஒரு கிழமைக்கு முன் கிடைக்கப்பெறும் வகையில் பரீட்சை அனுமதி அட்டை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களுடன் அது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் வினவுதல் வேண்டும் :-

01. பரீட்சையின் பெயர் ;
02. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
03. விண்ணப்பத்தினை அனுப்பிய தபால் அலுவலகம், திகதி மற்றும் பதிவு இலக்கம் ;
04. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம்.

14. பரீட்சார்த்திகள் தனது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-

01. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

02. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15. பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் குறிப்பிட்ட காலத்தில் தெரிவிக்கப்படும். அனைத்து விண்ணப்ப தாரர்களும் அரச வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

16. இப்பரீட்சையினை நிகழ்த்துதல், நியமனம் வழங்குதல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் சம்மந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஈ. எம். என். எம். ஏக்கநாயக்க,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு,
த. பெ. 114,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2009.11.25

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2009**

Open Competitive Examination for Recruitment to Class III of Public Management Assistants Service – 2009

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கத்தை குறிப்பிடவும்.

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் : உ-ம் : PERERA, A.B.C.)
1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
1.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
2.2 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3. 3.1 பால் :
(பெண் - 1/ஆண் - 0) [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4.0 4.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிட மாவட்டம் :----.
4.2 பிரதேச செயலாளர் பகுதி :----.
4.3 வசிக்கும் கால எல்லை :----.

5.0 கல்வித் தகைமைகள் :

(I) க. பொ. த. (சா/த) பரீட்சை :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| .............. | ............... | .............. | .............. |
| .............. | ............... | .............. | .............. |

(II) க. பொ. த. (உ/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :-

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| .............. | ............... | .............. | .............. |
| .............. | ............... | .............. | .............. |

6.0 நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :- (உரிய கூட்டினுள் " ✓ " அடையாளமிடவும்.) (ஆம் எனில் விபரங்களை குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(I) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

(II) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

(III) செலுத்திய பணம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும்.) |

8. இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். மேலும் இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**9.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ........... ஆந் திகதியில் இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.

பதவி :----.

முகவரி :----.

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

12-360

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.